



யாழ் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும்,
திருநெல்வேலியை வசிப்பிடமாகவும்,
இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட
எமது குடும்ப விளக்கு

அமரர் திரு **கந்தசாமி தயாபரசிவம்**
அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**16.06.2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்.
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி உருகி ஒளியூட்டி.
ஆலமரமாக எம் குடும்பத்திற்கு நிழல் பரப்பி
எம்மையெல்லாம் அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
வளர்த்து நல்வழிகாட்டி.
நற்கல்வியூட்டி. உறுதுணையாக இருந்து
சொந்த பந்தங்கள் அனைவருக்கும் பக்கபலமாய் இருந்து
சீரும் சிறப்புடன் வாழவைத்து.
மனிதருள் மாணிக்கமாய்.
குடும்பத்தின் தலைவராக. தந்தையாக மனம் பல
மாண்புடன் பரப்பி இனமெல்லாம் இன்புடன் வாழ
ஏற்ற நற்பணிகள் காத்து வையத்துள்
என்றும் நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினிய மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

**என்றும் நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அன்னை மடியில்

25 * 05 * 1939



ஆண்டவன் அடியில்

17 * 05 * 2017

# அமரர் திரு கந்தசாமி தயாபரசிவம்

## திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி அமைந்த வைகாசித்திங்கள்
பூண்ட அபர பக்க சப்தமியில் - மாண்பு
கந்தசாமி மைந்தன் தயாபரசிவம் ஐயன்
கந்தவன் பதமடைந்தான் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே

## தேவாரம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையாண் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரனாய் அடியேன் மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதி

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன்வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

## மூல மந்திரம்

ஓம் சக்தியே! பராசக்தியே!
ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!
ஓம் சக்தியே! மருவூர் அரசியே!
ஓம் சக்தியே! ஓம் விநாயகா!
ஓம் சக்தியே! ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே! ஓம் பங்காரு காமாட்சியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 108 போற்றித் திருவுரு

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஓம் | ஓம் சக்தியே | போற்றி | ஓம் |
| 2. | ஓம் | ஓங்கார ஆனந்தியே | போற்றி | ஓம் |
| 3. | ஓம் | உலக நாயகியே | போற்றி | ஓம் |
| 4. | ஓம் | உறவுக்கும் உறவானவளே | போற்றி | ஓம் |
| 5. | ஓம் | உள்ளமலர் உவந்தவளே | போற்றி | ஓம் |
| 6. | ஓம் | ஓதரிய பெரும் பொருளே | போற்றி | ஓம் |
| 7. | ஓம் | உண்மைப் பரம் பொருளே | போற்றி | ஓம் |
| 8. | ஓம் | உயிராய் நின்றவளே | போற்றி | ஓம் |
| 9. | ஓம் | மருவத்தூர் அமர்ந்தாய் | போற்றி | ஓம் |
| 10. | ஓம் | மனமாசைத் துடைப்பாய் | போற்றி | ஓம் |
| 11. | ஓம் | கவலை தவிர்ப்பாய் | போற்றி | ஓம் |
| 12. | ஓம் | ககனவெளி ஆனாய் | போற்றி | ஓம் |
| 13. | ஓம் | புற்றாகி வந்தவளே | போற்றி | ஓம் |
| 14. | ஓம் | பாலாகி வடிந்தவளே | போற்றி | ஓம் |
| 15. | ஓம் | பாமரர் துயர் துடைப்பாய் | போற்றி | ஓம் |
| 16. | ஓம் | பண்ணாக இசைந்தாய் | போற்றி | ஓம் |
| 17. | ஓம் | பாமலர் உவந்தாய் | போற்றி | ஓம் |
| 18. | ஓம் | பாம்புரு ஆனாய் | போற்றி | ஓம் |
| 19. | ஓம் | சித்துரு அமைந்தாய் | போற்றி | ஓம் |
| 20. | ஓம் | செம்பொருள் நீயே | போற்றி | ஓம் |
| 21. | ஓம் | சக்தியே தாயே | போற்றி | ஓம் |
| 22. | ஓம் | சன்மார்க்க நெறியே | போற்றி | ஓம் |
| 23. | ஓம் | சமதர்ம விருந்தே | போற்றி | ஓம் |
| 24. | ஓம் | ஓங்கார உருவே | போற்றி | ஓம் |
| 25. | ஓம் | ஒருதவத்துக் குடையாய் | போற்றி | ஓம் |
| 26. | ஓம் | நீள்பசி தவிர்ப்பாய் | போற்றி | ஓம் |
| 27. | ஓம் | நிம்மதி தருவாய் | போற்றி | ஓம் |
| 28. | ஓம் | அகிலமே ஆனாய் | போற்றி | ஓம் |
| 29. | ஓம் | அண்டமே விரிந்தாய் | போற்றி | ஓம் |
| 30. | ஓம் | ஆன்மிகச் செல்வமே | போற்றி | ஓம் |
| 31. | ஓம் | அனலாக ஆனாய் | போற்றி | ஓம் |
| 32. | ஓம் | நீராக நிறைந்தாய் | போற்றி | ஓம் |
| 33. | ஓம் | நிலனாகத் திணிந்தாய் | போற்றி | ஓம் |
| 34. | ஓம் | தூறாக வளர்ந்தாய் | போற்றி | ஓம் |
| 35. | ஓம் | துணிபொருள் நீயே | போற்றி | ஓம் |
| 36. | ஓம் | காராக வருவாய் | போற்றி | ஓம் |
| 37. | ஓம் | கனியான மனமே | போற்றி | ஓம் |
| 38. | ஓம் | மூலமே முதலே | போற்றி | ஓம் |
| 39. | ஓம் | முனைச்சுழி விழியே | போற்றி | ஓம் |
| 40. | ஓம் | வீணையே இசையே | போற்றி | ஓம் |
| 41. | ஓம் | விரைமலர் அணிந்தாய் | போற்றி | ஓம் |
| 42. | ஓம் | தத்துவங் கடந்தாய் | போற்றி | ஓம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. ஓம் சகலமறைப் பொருளே போற்றி ஓம்
44. ஓம் உத்தமி ஆனாய் போற்றி ஓம்
45. ஓம் உயர்மொழிக் குருவே போற்றி ஓம்
46. ஓம் நெஞ்சம் நீ மலர்வாய் போற்றி ஓம்
47. ஓம் நீள் நிலத் தெய்வமே போற்றி ஓம்
48. ஓம் துரிய நிலையே போற்றி ஓம்
49. ஓம் துரியா தீத வைப்பே போற்றி ஓம்
50. ஓம் ஆயிர இதழ் உறைவாய் போற்றி ஓம்
51. ஓம் அகிலமெலாம் ஆட்டுவிப்பாய் போற்றி ஓம்
52. ஓம் கருவான மூலம் போற்றி ஓம்
53. ஓம் உருவான கோலம் போற்றி ஓம்
54. ஓம் சாந்தமே உருவாய் போற்றி ஓம்
55. ஓம் சரித்திரம் மறைத்தாய் போற்றி ஓம்
56. ஓம் சின்முத்திரை தெரிப்பாய் போற்றி ஓம்
57. ஓம் சினத்தை வேரறுப்பாய் போற்றி ஓம்
58. ஓம் கையிரண்டு உடையாய் போற்றி ஓம்
59. ஓம் கரைபுரண்ட கருணை போற்றி ஓம்
60. ஓம் மொட்டுடைக் கரத்தாய் போற்றி ஓம்
61. ஓம் மோனநல் தவத்தாய் போற்றி ஓம்
62. ஓம் யோகநல் உருவே போற்றி ஓம்
63. ஓம் ஒளியென ஆனாய் போற்றி ஓம்
64. ஓம் எந்திரத் திருவே போற்றி ஓம்
65. ஓம் மந்திரத் தாயே போற்றி ஓம்
66. ஓம் பிணி தவிர்த்திடுவாய் போற்றி ஓம்
67. ஓம் பிறவிநோய் அறுப்பாய் போற்றி ஓம்
68. ஓம் மாயவன் தங்கையே போற்றி ஓம்
69. ஓம் சேயவன் தாயே போற்றி ஓம்
70. ஓம் திரிபுரத்தாளே போற்றி ஓம்
71. ஓம் ஒருதவம் தெரிப்பாய் போற்றி ஓம்
72. ஓம் வேம்பினை ஆள்வாய் போற்றி ஓம்
73. ஓம் வினையெலாம் தீர்ப்பாய் போற்றி ஓம்
74. ஓம் அஞ்சனம் அருள்வாய் போற்றி ஓம்
75. ஓம் ஆருயிர் மருந்தே போற்றி ஓம்
76. ஓம் கண்ணொளி காப்பாய் போற்றி ஓம்
77. ஓம் கருத்தொளி தருவாய் போற்றி ஓம்
78. ஓம் அருள்ஒளி செய்வாய் போற்றி ஓம்
79. ஓம் அன்பொளி கொடுப்பாய் போற்றி ஓம்
80. ஓம் கனவிலே வருவாய் போற்றி ஓம்
81. ஓம் கருத்திலே நுழைவாய் போற்றி ஓம்
82. ஓம் மக்களைக் காப்பாய் போற்றி ஓம்
83. ஓம் மனநோயைத் தவிர்ப்பாய் போற்றி ஓம்
84. ஓம் எத்திசையும் ஆனாய் போற்றி ஓம்
85. ஓம் இதயமாம் வீணை போற்றி ஓம்
86. ஓம் உருக்கமே ஒளியே போற்றி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 87. ஓம் | உள்ளுறை விருந்தே | போற்றி | ஓம் |
| 88. ஓம் | மலப்பிணி தவிர்ப்பாய் | போற்றி | ஓம் |
| 89. ஓம் | மனங்கனிந்து அருள்வாய் | போற்றி | ஓம் |
| 90. ஓம் | நாதமே நலமே | போற்றி | ஓம் |
| 91. ஓம் | நளின மலர் அமர்வாய் | போற்றி | ஓம் |
| 92. ஓம் | ஒற்றுமை சொல்வாய் | போற்றி | ஓம் |
| 93. ஓம் | உயர்நெறி தருவாய் | போற்றி | ஓம் |
| 94. ஓம் | நித்தமுங் காப்பாய் | போற்றி | ஓம் |
| 95. ஓம் | நேரமும் ஆள்வாய் | போற்றி | ஓம் |
| 96. ஓம் | பத்தினி பணிந்தோம் | போற்றி | ஓம் |
| 97. ஓம் | பாரமே உனக்கே | போற்றி | ஓம் |
| 98. ஓம் | வித்தையே விளக்கே | போற்றி | ஓம் |
| 99. ஓம் | விந்தையே தாயே | போற்றி | ஓம் |
| 100.ஓம் | ஏழையர் அன்னை | போற்றி | ஓம் |
| 101.ஓம் | ஏங்குவோர் துணையே | போற்றி | ஓம் |
| 102.ஓம் | காலனைப் பகைத்தாய் | போற்றி | ஓம் |
| 103.ஓம் | கண்மணி ஆனாய் | போற்றி | ஓம் |
| 104.ஓம் | சத்தியப் பொருளே | போற்றி | ஓம் |
| 105.ஓம் | சங்கடந் தவிர்ப்பாய் | போற்றி | ஓம் |
| 106.ஓம் | தத்துவச் சுரங்கமே | போற்றி | ஓம் |
| 107.ஓம் | தாய்மையின் விளக்கமே | போற்றி | ஓம் |
| 108.ஓம் | ஆறாதார நிலையே | போற்றி | ஓம் |

ஓம் சக்தி! - ஓம் சக்தி! - ஓம் சக்தி! – ஓம்!
ஓம் சக்தி! - ஓம் சக்தி! - ஓம் சக்தி! – ஓம்!
ஓம் சக்தி! - ஓம் சக்தி! - ஓம் சக்தி! – ஓம்!
ஓம்! ஓம்! ஓம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு கந்தசாமி தயாபரசிவம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

எமது தாயக மண்ணான வலிகாமத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணப்பகுதியில் சைவமும் தமிழும் ஒருங்கமைந்த சிறு கிராமமான சிறுப்பிட்டி என்ற பச்சைப் பசேலெனத் திகழும் செம்மண்ணின் விவசாயப்பூமியில் 25.05.1939இல் உதயமானார். இவர் கந்தசாமி யோகம்மா என்பவரின் அன்புப் புதல்வனும், இராசு, பூரணம், கண்மணி, நடராசா என்பவரின் அன்புச் சகோதரரும் ஆவர். இவரை அன்பாக 'குஞ்சு' என அவர்களின் சகோதரர்கள் உற்றார் உறவினர்கள் அழைப்பார்கள்.

இவர் சோமஸ்கந்த கல்விக்கூடத்தில் கல்வி கற்கத் தொடங்கினார். பாடசாலை முடிந்து வந்ததும் அவரின் தாய் தந்தையுடன் விவசாயத்தில் பற்றுக் கொண்டார். அவரின் பொழுது போக்கு கமத்துடன் தாய் தந்தையின் உழைப்பிற்கு நிகரானவர்.

நாராயணபிள்ளை சின்னப்பிள்ளை என்பவரின் பிள்ளைவாள் பரம்பரையான தம்பு, நடராசா, சின்னராசா, மகாலிங்கம், இராமசேது என்பவரின் அருமைத் தங்கை இராசமணி அவர்கள் அன்பாக எல்லோரும் 'பிள்ளை' என்று அழைப்பார்கள் அவர்களின் அன்புச் சகோதரர்கள் தாய் தந்தையின் விருப்பப்படி அவர்களின் காதல் திருமணத்தை சொந்த மச்சானாகிய தயாபரசிவம் (குஞ்சு) இராசமனி (பிள்ளை) என்பவருக்கு 27.05.1963ம் ஆண்டு திருமணத்தை நிறைவேற்றினர்கள்.


அவர்களது இல்லற வாழ்க்கையை அன்புச் சகோதரர்களுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஐந்து வருடங்களாக பிள்ளைகள் இல்லை என வருந்தி நல்லூர் குருகனிடம் தவமிருந்து தவபாலன் எனவும் சிவமிருந்து சிவபாலனையும், தயாவதி, தயாபவானி, தயறஜனி என பிள்ளைகளை ஈன்று எடுத்து இல்லறத்தை நல்லறமாய் இனிதே நடத்தி வந்தார்.

(12ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Family Tree of Mr Th




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# hayaparasivam




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின் 1979ம் ஆண்டு சவுதி, ஓமான் நாடுகளின் தொழில் புரிந்து வந்தார். நாட்டில் பல்வேறு பிரச்சனைகள் தொடங்கிய காரணத்தால் தனது பிள்ளைகளையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் பிள்ளைகளின் அரவணைப்பில் ஒரு வருடகாலத்திற்குள் அப்பா அம்மாவை லண்டன் வாழ்வதற்கு வரும்படி பிள்ளைகளின் விருப்பப்படி தாய்மண்ணை விட்டு 1997ம் ஆண்டு லண்டன் வந்தார்கள். வந்தும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், மருமக்கள் என வேறுபாடுமின்றிக் கூட்டுக் குடும்பமாக சந்தோசமாக வாழ்ந்த நாட்கள் எவராலும் மறக்க முடியாது, சகோதரனாய், மாமனாய், பேரனாய், குஞ்சு மாமாவாய், அன்பிலே தெய்வமாய், பழகுதற்கும் பேசுவதற்கும், பகிடி விடவும் பண்புடைய நண்பனாய் கண்ணுக்குள் இமையாக எம்மைக் காத்து நல்மக்களாய் யாவருக்கும் மதிக்கத் தக்கதோர் சுமைதாங்கியாய் நின்றிட்ட அருமை அப்பா இன்று எங்களோடு நீங்கள் இல்லையென நினைக்க எமது கண்களில் கண்ணீர் நிறைகின்றது. அப்பா எப்போதும் எம் அருகில் இருப்பதே எமக்கு இன்பம். எப்போதும் எம் நினைப்போடு இருந்தவரே தவப்பயனே நீயெமக்குத் தந்தையானது.

ஒருநாள் கூட நோயின்றி துடிக்கவில்லை. அவர் பாயில் படுக்கவில்லை. இறுதி நேரத்தில் கூட வீட்டுப்பூந்தோட்டத்தில் பூங்கன்று நாடும் போது அவருக்கு தலையிடி என்று மகளை கூப்பிட்டு இருந்து கதைத்த போது ஒரு நாளும் இல்லாத புதிய தலையிடி என கூறினார்.

இப்படிப் பலகாலம் விருட்சமாய் இருந்தவர் ஆலமரத்து ஆணிவேரே அறுத்தது போல எழபத்து எட்டு வயதில் எது துன்பமின்றி அம்பலத்தான் அருட்பாதம் அடைந்தாரே வைகாசி மாதத்தில் எம் அருமை அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

நெஞ்சில் நிறைந்தவனே நீங்காத நினைவலையே
எல்லோரையும் தவிக்கவிட்டுப் போனவரே
கண்ணுக்குள் தவழகின்றாய் கண்ணான அப்பாவே
நீயிருப்பாய் என்றெண்ணி நாமிருந்தோம்
நீயில்லா உலகின்றி செய்வதறியாது தவிக்கின்றோம்

## பிள்ளைகள் புலம்பல்

அன்பின் திருவுருவே! ஆசையுள்ள என் அப்பாவே பண்பின் உறைவிடமாய் பாசமிக்க வாழ்ந்தவரோ. அப்பா உங்கள் சிரித்த முகத்தையும், பாசமான அந்த இனிய மழலை குரலையும் மறுபடி எப்படி கேட்போம்? பிள்ளைகள், மனைவி, பேரப்பிள்ளைகள், மருமக்கள் என்று எங்கள் மீதும் பொழிந்த அன்பையெல்லாம் இன்று இழந்து தவிக்கின்றோம் அப்பா.

அப்பா உங்களை இழந்து விட்டோம் இனிமேல் உதவிக்கு யார் வருவார். அப்பா என்ன அழுதுமென்ன அப்பா உங்களை போல் யார் இருப்பார்? அப்பா எம்மை எல்லாம் தவிக்கவிட்டு எங்கோடி மறைந்து விட்டீர்கள், ஏக்கமுடன் எங்கள் கண்கள் கண்ணீரை சொரிகின்றதே உங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

## மருமக்கள் புலம்பல்

பாசமிக்க மாமாவே!

மனம் நிறைந்த மாமாவே!

அன்பு மாமா அன்புப் பேச்சால் எம்மை சிரிக்க வைக்கும் எங்கள் மாமாவே. உங்கள் பிரிவு எங்களுக்கு அதிர்ச்சியையும் தாங்காத துயரத்தையும் அளித்துள்ளது. குழந்தைகள் தாத்தா என்று கூப்பிடுவது கேட்கவில்லையா? எங்களைக் கூப்பிட்டுப் பால் பருகிப் போனதுதான் எங்கேயோ? எப்போ இனி உங்களை காண்போம் மாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு மாமாவே!

நாம் பிறந்த காலம் முதல் எங்களுக்கு புத்திமதி பல கூறி, உங்களின் நகைச்சுவை பேச்சால் எல்லோரையும் சிரிக்க வைக்கும் எம் மாமாவே (குரு) சொல்லாமல் கொள்ளாமல் விண்ணுலகம் விட்டு பிரிந்தீர்களே! உங்கள் பிரிவை எம்மால் தாங்க முடியவில்லை குருவே! என் அருமை மாமாவே! சேர்ப்பது மிகக் கடினம். செலவு செய்வது மிக எளிது. பணம் மட்டும் அல்ல அடுத்தவர் உள்ளத்தில் நாம் சேர்த்து வைக்கும் அன்பு. நல்லெண்ணம் கொண்ட எங்கள் மாமாவே!

உங்கள் பிரிவால் வாடும்

மருமகள் ராஜன் தம்பு

## அன்புமிகு மாமாவே!

நான் பிறந்தகாலம் முதல் எனக்கு தாயாய், தந்தையாய், குருவாய், நண்பனாய் பல்வழிகளில் வழிகாட்டி என்னை நல்லமுறையில் வாழ வைத்தீர்கள். எங்கள் அனைத்து இன்ப துன்பங்களிலும் இணைந்து நின்றீர்கள். ஆல மரமாக நின்று உரம் தந்தீர்கள். இன்று திடுமென நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்தமை எங்களால் தாங்கிக் கொள்ள முடியாமல் உள்ளது. உங்கள் ஒவ்வொரு செயலும் என் கண்முன்னே நிழலாக ஓடிக்கொண்டே இருக்கின்றது. நாங்கள் வாழும் காலம் காலமெல்லாம் உங்கள் இனிய நினைவுகள் எம்மை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்பு மருமகன்

குபேந்திரன்(குமார்)

கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## This is a poem written by all the grandchildren

I know we are all feeling really sad,
That we've lost our loving Thata,
our friend and our dad Together we have cried an ocean of tears,
As we feel so empty and hold many fears,
But Thata would want us to know he's in a good place,
And that he's watching us all with a smile on his face,
As we have made him so proud, as proud as can be,
That he has raised such a beautiful and special family,
Thinking back now we really must say,
We feel lucky and privileged to have known our Thata to this day,
In our life, you have played a special part,
The memories we will treasure and keep close to your heart,
Although he has gone we will always be together,
And his spirit will live on in each one of us forever,
When you look to the sky, look for the brightest star,
As that will be Thata looking down on us from afar,
Thata, if you are listening say a prayer for us every day,
Be sure to protect us and guide us on our way,
We know when God called you,
Thata you had to go,
But we want you to know Thata we miss you and love you so much.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Grandchildren speech

Thata lived a remarkable life, one that inspired us greatly. His adventurous attitude, his broad range of interests, and his happy demeanor made him a wonderful person to know. He was patient, and generous with his time and affection. He pursued many endeavours diligently, and always rose to meet a challenge. He was philosophical in his approach to life. He especially had a great perspective when it came to the little things, never displaying anger or impatience. Instead, he showed a great dignity and humor. Our grandfather was a great man. When we think about him the words that come to mind are: hard worker, caring, loving, humorous, faithful, respectful, storyteller, craftsman and family man. These are just a few words that come to mind, but it is impossible to summarise how great a person he was in words. We will miss his perspective and his gentle humour. We will miss the surprising depth and scope of his knowledge. We will miss the warmth he extended to everyone he met. Today, we say our Earthly goodbyes to one of the most incredible men we have ever met in my entire life. Our family is grieving the loss of our grandfather; we feel the empty void very clearly. The head of the family is no longer here with us, and we feel his absence sharply. But we know that he is no longer in pain, and is now in a place that is more amazing than the best possible day here on Earth. We also know that this is just a temporary goodbye. We know we will see him again. We are counting on it. Thata, you will always be in our hearts. We will always love you.

**Dineshkanth, Ayuaran, Saiyuaran, Kirthana, Jayuaran, Kaarthikan, Thakshayani, Sakana, Rushanth, Vaisha, Vaisu**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க...

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், பின்விளைவை அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள் விட்டுக்கொடுங்கள்.
- சிலநேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள். குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வமாகாதீர்கள்.
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களில் செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, பதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து, அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன் வாருங்கள்.

- தத்துவஞானி வேதாத்திதி மகரிஷ---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைக்கு சில வரிகள்

அன்பை வாங்கவும் முடியாது விற்கவும் முடியாது
அன்பின் விலை அன்புதான்.

அறிவாற்றலால் கடவுளை அறிய இயலாது
ஆத்மீக சக்தியால் அவரை உணரலாம்.

பிறரை மாய்க்க எண்ணுபவன்
தன்னையே அழித்துக் கொள்வான்.

ஆட்டின் வேஷத்தில் ஓநாய்களும் வரலாம்
ஆதலால் நீ எதற்கும் எச்சரிக்கையாய் இரும்.

அன்பிற்கும் அறிவிற்கும் எல்லையே இல்லை.

நன்மையை பலர் விரும்புவார்கள் - ஆனால்
உண்மையை சிலரே விரும்புவார்கள்.

அன்பு உன் அன்னை. அறிவு உன் தந்தை
அறம் உன் சகோதரம். பொறுமை உன் மனைவி
பண்பு உன் மகன். ஆண்மை உன் மகள்.
இக்குடும்பத்துடன் சேர்ந்து வாழுங்கள்.

ஒரு வார்த்தை பேசினாலும் அதைப் பலமுறை சிந்தித்துப் பேசு.

மனிதனின் முதல் எதிரி கோபம்தான் - அது
மனிதனை குருடனாக்குகிறது. செவிடனாக்குகிறது.
அறிவைக் கெடுக்கிறது. ஆதாள பள்ளத்தில் தள்ளுகிறது.

சிந்தித்து செயலாற்று அது உன் வெற்றிக்கு
வழி கோலும்.

தவறுகள் திருத்தப்பட வேண்டியவையே ஒழிய
அவை விமர்சிக்கப்பட வேண்டியவை அல்ல.

சிரியுங்கள், உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும்
அழுங்கள், நீங்கள் மட்டும் தான் அழுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
**Saiva Munnetta Sangam (UK)**
*"Community Service Through Saiva (Hindu) Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB
Tel : 020 8514 4732
**Registered Charity No: 292085**
www.saivamunnettasangam.com email: smsukinfo@gmail.com

*40th Year Management Committee*

*Vice-Patrons*
Dr (Mrs) Indra Siva-yoham
Mr R Pathmanathan

*President & Trustee*
Mr Sathasivam Anandathiyagar

*Vice-President & Trustee*
Mr D Rabindramohan

*Hony. General Secretary & Trustee*
Mr M Indusegaran

*Hony. Treasurer & Trustee*
Mr S Nirunjan

*Hony. Deputy Gen. Secretary & Trustee*
Mr S Balasingam

*Trustees*
Mr W Nagaratnam
Mr V R Ramanathan
Mr C Sithamparapillai
Mr S Thamboo

*Building Project Secretary*
Mr G Parameswaran

*Examination Secretary*
Mr V Jogendirabose

*Membership Secretary*
Mr S Ramarujah

*Overseas Project Secretary*
Mr V C Vamanmanthan

*Publication Secretary*
Mr V Sivanarutchelvar

*Religious Secretary*
Mr S Kugarajah

*School Secretary*
Mrs S Ahtheesan

*Social Service Secretary*
Mrs B Kanagasabesan

*Assistant Treasurer*
Mrs G Sooriyakumar

*Committee Members*
Mrs. A. Gunarasa
Mrs V Kanagendiran
Mr V R Loganathan
Mrs Vasantha Mahadevan
Mrs. S. Chandragopal
Mrs P Sabaratnam

15.06.2017

# எங்களது அஞ்சலிகள்

காலஞ் சென்றதிரு தயாபரசிவம் அவர்களின் மனைவியார் திருமதி இராசமணி தயாபரசிவம் அவர்கள் சங்கத்தின் நால்வர் மூத்தோர் நிலையத்திற்குப் பல ஆண்டுகளாக அறிமுகமானவர். அவ்வாறே திரு தயாபரசிவம் அவர்களின் ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் சங்கத்துடன் நீண்ட காலத் தொடர்புடைய அன்பர்கள். எங்கள் பணிகளிலும், வளர்ச்சியிலும் அக்கறையுடைய இக் குடும்பத்தின் மூத்தவர் திரு கந்தசாமி தயாபரசிவம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திக்கின்றோம்.

அவருடைய ஆத்மா அவரின் அன்பு உறவுகளை என்றும் வழி நடத்திப் பாதுகாக்கும் என்ற ஆறுதல் வார்த்தைகளைக் கூறி எங்களின் அன்பையும் ஆதரவையும் குடும்ப அங்கத்தவர்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

இப்படிக்கு

ஆட்சிக்குழுவின் சார்பில்

சதாசிவம் ஆனந்ததியாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கள ஆரத்தி

ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய வென தினம் பாடிப் பணிந்தோம்
ஜெக மெங்கும் அமைதியைத்தா – ஓம் ஸ்ரீ (ஜெய)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவை எல்லாம் மறைய – அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பி லெமை – ஓம் ஸ்ரீ (ஜெய)

இரண்டுகள் போக மூண்றுக ளகல
ஈஸ்வரி பல மருள்வாய் - அம்மம்மா
கரங் குவித்தோமினி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் – ஓம் ஸ்ரீ (ஜெய)

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன் பருள்வாய் - அம்மம்மா
தேசுடன் வாழக் காட்டடி காஷி
தேவியுடன் அடைக்கலம் நாம் – ஓம் ஸ்ரீ (ஜெய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து – அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்துக் கமைதியைத் தா – ஓம் ஸ்ரீ (ஜெய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் வாழ்வின் உயிர் நாடியாகவும் அன்புக் குலதெய்வமாகவும் வீற்றிருந்த **திரு கந்தசாமி தயாபரசிவம்** அவர்கள் 17.05.2017 அன்று சிவபதமடைந்த செய்தி அறிந்து உள்ளுர், வெளிநாடுகளில் இருந்தும் தொலைத் தொடர்புகள் மூலம் அனுதாபங்கள் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், வெளி நாடுகளில் இருந்தும் எமது இல்லம் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் கிரியைகளின் போதும் ஏனைய வழிகளிலும் உதவியவர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளைத் திறம்படஒழுங்கமைத்து அந்திமக்கிரியைகளை நடாத்த உதவிய சைவ முன்னேற்றச்சங்கத்தினருக்கும், ஈமைக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையங்கள், மலர்மாலைகள் வைத்தும் மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் இன்று நடைபெறும் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இம்மலரை அழகுற அச்சமைத்துத்தந்த ஜே ஆர் அச்சகத்தினருக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் அனைவருக்கும் நன்றி நவில்கின்றோம்.

இங்ஙனம்

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Designed & Printed @ JR Print www.jrdigitals.com | T : 0208 503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org